# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 17/07/2021 | முதல் | 21/07/2021 |
| அறிக்கை எண் : | 057/ 2021 | வெளியீட்டு நாள் : | | 16/07/2021 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36° செல்சியஸ் ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 25°- 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.07.2021 முதல் 15.07.2021) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-07- 2021 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13/07 | 14/07 | 15/07 | தேதி | நாள்-1 17/07 | நாள்-2 18/07 | நாள்-3 19/07 | நாள்-4 20/07 | நாள்-5 21/07 |
| 3.5 | 4.9 | 5.0 | மழை (மி.மீ) | 15 | 6 | 8 | 2 | 2 |
| 36 | 36 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செ) | 31 | 31 | 30 | 31 | 31 |
| 26 | 25 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 23 | 23 | 22 | 23 | 23 |
| 5 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 62 | 60 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 54 | 52 | 57 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 7 | 15 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 10 | 10 |
| மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 17, 19 தேதி மிதமான மழையும் மற்றும் 18 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 30° -31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**கனமழை எச்சரிக்கை:**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை16, 18ம் தேதி இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு·

மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் ஜூலை 17,19 மற்றும் 20ம் தேதிகளில் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

16.07.2021 மற்றும் 18.07.2021 - தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது.

**விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு :**

ஜூலை 16 முதல் 22 தேதி வரையிலான காலகட்டத்தில் தமிழகத்தில் இயல்பை விட கூடுதலான மழையே பெய்ய வாய்ப்பு உள்ளது.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

## முக்கிய பயிர்கள் : தென்னை & கால்நடை

நிலவும் பருவச்சூழ்நிலையானது தென்னையில் களைகட்டுப்பாடு செய்ய ஏற்ற தருணமாகும். இருவிதை இலைகள் நிறைந்த தென்னந்தோப்புகளில் களை முளைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு 1கிலோ அட்ரசின் களைக்கொல்லியை தேவையான அளவு தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும் புல் வகை மற்றும் கோரை வகை களைச் செடிகள் உள்ள தோப்புகளில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி கிளைபொசேட் என்னும் களைக்கொல்லி மற்றும் 20 கிராம் அம்மோனியம் சல்பேட் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தற்போது நிலவும் பருவச்சூழலில் மாடுகளில் சப்பை நோய்; தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது. இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாக உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது. இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான இளம் மாடுகளை 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை அதிகம் பாதிக்கிறது. தொடை அல்லது முன்கால் சப்பையிலோ அல்லது கழுத்து போன்ற சதைப்பிடிப்புள்ள பகுதிகளிலோ வெப்பம் மிகுதியாகவும் வலியோடு கூடியதும், கடினமான தன்மையுள்ள பெருத்த வீக்கம் காணப்படும் தோலின் நிறம் கருப்பாக இருக்கும். இதன் காரணமாக மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும். நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் மாட்டைப்பிரித்துத் தனியாக ஒதுக்குப்புறமாக வைத்துக் கண்காணிக்க வேண்டும். நோய்க் கண்ட 48 மணி நேரத்தில் உடனடியாக மருத்துவம் செய்யாமல் போனால், மாடுகள் இறந்து விடும.; கால்நடை மருத்துவரின் உதவியுடன் உடனடியாக மருத்துவம் செய்யவேண்டும். மழைக்காலத்திற்கு சுமார் 1 மாத்திற்கு முன்பே ஒவ்வொரு ஆண்டும் மாடுகளுக்குத் தடுப்பூசி போடவேண்டும்